# ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்

கன்னித்தாயின் கரம் பிடித்து,
கரடு முரடு வழி நடந்து,
உழைப்பின் செந்நீரை
உரமாக்கி, களை நீக்கி,
காலத்தின் அறுவடைக்காய்
காத்துக்கிடக்கிறேன்
கால் கடுக்க......,
மெய் - உள்ளத்தின் அழுக்கு
இருட்டுக்குள்
வௌவாலாய்
உறங்கும் மனிதா......!
இன்று முதல் - நீ
விடியலை எழுப்பும் முதல்வா!

அக்கினி சுமந்த
உச்சிப் பொழுதில்,
வெப்பத்தகடொன்றில்
வெறுங்காலால்
நடப்பது போல்.....,
நிழலறியாப் பூமியொன்றில்
நான் நாதியற்று
நிற்பது போல்......,
என்னுள் ரணங்களால்
நிறைந்து போன
கணங்கள்...!

நினைவுகள் கூட
பயணிக்க முடியாதது போல்,
அத்தனை துயரையும்
சுமக்க முடியாத......
அப்பாவி இதயம் - பெரு
கோவத்துடன்
குழந்தையாய் வெடித்து
அழுகிறது...,

ஹோ மனிதமே.......!
நீ எங்கிருக்கிறாய்...?
எனைப் பாராமல்
அர்த்த ராத்திரியில்
அபலைகளாய் கைவிட்டுப் போன.....,
என் ஆன்மா தேடுகிறது,

பனிப்படுக்கையில்
மௌனக் குடை பிடித்து
விரிந்த மலைத் தொடர்கள்,
நம் உறவு போல் நீண்டன...!
நம் சுவாசம், நம் வியர்வை

நம் உணவு, நம் சிரிப்பு
நம் கண்ணீர் ஒன்றான பின்
எமக்குள் அன்னியம் சொல்லி
பிரிச்சுப் போட
இக் கோடரிகள் ஆர் .....?
மனிதனின் சத்துரு
இந்த
பாரபட்சம் தான்......!
கட்டியக்காரனே....!
எனை மதம் சொல்லிப்
பிரிச்சுப்போட
உன்னால முடியாது!
நான் பாஸப் பறவை
எல்லா இதயத் தடாகங்களிலும்
நீரருத்துவேன்...,

இன்று
வாழ்க்கை....!
அவநம்பிக்கைகளில் தோய்ந்து,
அசிங்கப்பட்டு,
அன்பே அபத்தமாகி,
அழகுகள் அசிங்கமாகி,
வெட்கம் கெட்ட ரோசாவாக
முள்ளோடும் புதரோடும்
புதுமையாய் தெரிந்தன
பொறுமையும் மன்னிப்பும்....,

கோபம் அது கொடியது,
அரக்கனை விட
உக்கிரமானது.....,
மனிதனை கேவலப்படுத்தும்
மாயையானது...,
பொறுமையின் இருப்பை – அது
போராடி அழித்து விடும்...,

ஒரு காலத்திலே....!
என்று தொடங்கும்
ஓராயிரம் நாடோடிக் கதைகள்
அர்த்தமற்றுப் போயின...,
மன இருட்டுக் குகைகுள்
இளைப்பாறும் வௌவால்களாய்...
மனிதாபிமான குணங்கள்,

நாளேனும் சூரியனைப் போலோரு...,
ஒளி விதைப்போனாகக் கூடாதா......?
சுடரெனும் நம்பிக்கை தானியங்களை
இதயப் பரப்பெங்கும்
விதைத்திருப்பேன்.

வரண்ட நிலமெங்கும்
வளநீர் பாய்ச்சி...,
மன்னிப்போர் மன்னிக்க...,
பொறுமையாளரே - நீர் பொறுமை கொள்க...,

என மனித மண்ணிற்கு - ஓர்
அழைப்பு விடுத்திருப்பேன்.

வஞ்சகர்களின் உள்ளங்களின்
வன்மையான உணர்வுகள்
மாறிவிடப் போவதில்லை - என
என் மனசுக்குள்
தெரியவந்த போது - இவ்
உள்ளங்களின் விஷமத்தை விட
உயிர் கொல்
கொரோனா
எவ்வளவு மேல் என
எண்ணத் தோன்றுகிறது...,

இம் மனிதம் அற்ற
மனங்களை விட்டு - ஓர்
பெரு வெளியில்,
நம் மண்ணில்,
ஒன்று கூடி,
பனம் பழம் சுட்டு,
பகிபுகள் பேசி,
பாட்டுட் பாடி,
மல்லாந்து படுத்துறங்க
துயர் நீங்க
மலரட்டும்....
மனிதாபிமான குணங்கள்
உனக்கும்
எனக்குமாய்.......!


முழுப் பெயர்:- சம்சுதீன் பஹ்மிதா நாஸ்
வயது:- 21
மின்னஞ்சல் - fahmithanaas2000@gmail.com
NIC No: - 200077203186
ஆக்கங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி தினத்தில் வயது:-
20 வயது 11 மாதம் 12 நாள்